**பிரயாணக் காப்புறுதி** FAQ/TI/004

**சர்வதேச காப்புறுதி சேவை வழங்குனரான Allianz Insurance Lanka Ltd நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது**

பின்வரும் எந்தவொரு கார்கில்ஸ் வங்கி கடன் அட்டையையும் உபயோகித்து நீங்கள் வெளிநாடு சென்று வருவதற்கான விமான பிரயாண டிக்கெட்டினை கொள்வனவு செய்யும் போது அல்லது இலங்கையிலிருந்து வெளிநாட்டிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்கான முற்பதிவை மேற்கொள்ளும் போது இலவச வெளிநாட்டு பிரயாண காப்பீட்டை அனுபவியுங்கள்.

**கடன் அட்டைகள்;**

1. கார்கில்ஸ் வங்கி டைட்டானியம் கடன் அட்டை
2. கார்கில்ஸ் வங்கி பிளாட்டினம் கடன் அட்டை
3. கார்கில்ஸ் வங்கி அஸென்ட் கடன் அட்டை

**பிரயாணக் காப்புறுதி தொடர்பான துரித வழிகாட்டல்**

**இந்த காப்பீட்டினை எவ்வாறு எனது குடும்பத்திற்கும் நீட்டித்துக்கொள்வது?**

பிள்ளைகள்)பிரயாணம் செய்யும் பட்சத்தில், மேற்குறிப்பிட்ட கார்கில்ஸ் வங்கி கடன் அட்டையை உபயோகித்து தமது இரு வழி விமானப் பிரயாணச் சீட்டுக்களை அல்லது வெளிநாட்டில் தங்குவதற்கான ஹோட்டல் முற்பதிவுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் தனது குடும்பத்திற்கும் இப்பிரயாணக் காப்புறுதியை கார்கில்ஸ் வங்கி கடன் அட்டை வாடிக்கையாளர் நீட்டித்துக் கொள்ள முடியும்.

**இச்சலுகையை அனுபவிப்பதற்கு காப்பீடு தொடர்பில் நான் அறிவிக்க வேண்டிய அல்லது வேண்டுகோள் விடுக்க வேண்டிய தேவை உள்ளதா?**

இல்லை. உங்களது கார்கில்ஸ் வங்கி கடன் அட்டையை உபயோகித்து இரு வழிப் விமானப் பிரயாணச் சீட்டு அல்லது வெளிநாட்டில் தங்குவதற்கான ஹோட்டல் முற்பதிவுகளை கொள்வனவு செய்யும் சமயத்தில் நீங்கள் தானாகவே இத்திட்டத்தினுள் உள்வாங்கப்படுகின்றீர்கள்.

**எனது துணை அட்டை வாடிக்கையாளரும் பிரயாணக் காப்புறுதி சலுகையைப் பெற்றுக்கொள்வாரா?**

ஆம். துணை வாடிக்கையாளர் மேற்குறிப்பிட்ட கார்கில்ஸ் வங்கி கடன் அட்டையை உபயோகித்து தனது/தமது இரு வழிப் விமானப் பிரயாண சீட்டு அல்லது வெளிநாட்டில் தங்குவதற்கான ஹோட்டல் முற்பதிவுகளை கொள்வனவு செய்யும் பட்சத்தில் அவருக்கும் இச்சலுகை கிடைக்கப்பெறும்.

**இக்காப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு வயது தொடர்பான உச்ச வரம்பு ஏதேனும் உள்ளதா?**

70 வயது வரை மட்டுமே இச்சலுகையை பெற்றுக்கொள்ள முடியும்.

**வீசா தேவைகளுக்காக கடிதம் ஒன்றை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

தேவையான உதவியைப் பெற்றுக்கொள்ள கார்கில்ஸ் வங்கி தொடர்பு மையத்தை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

**வெளிநாட்டில் உள்ளபோது எனக்கு உதவிகள் தேவைப்பட்டால் நான் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும்?**

+ 91 1 2 44 343 955 என்ற இலக்கத்தின் மூலமாக தயவு செய்து Allianz Global Assistance உதவு சேவையை தொடர்பு கொள்ளவும்

**மேலதிக தகவல் விபரங்கள் தேவையா?**

பின்வரும் இலக்கத்தின் மூலமாக தயவு செய்து தொடர்பு மையத்தை எந்நேரமும் தொடர்பு கொள்ளுங்கள்: தொ.பே: +94 11 7 640 640

Allianz Insurance Lanka Ltd உடன் தொடர்பு கொள்ள விரும்பின் அதன் இலங்கை அலுவலகத்தை பின்வரும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ள முடியும்: தொ.பே: +94 11 2 300 400